## காசநோய்க்கு சிகிச்சை பெறும்போது வேறு எதையெல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும்?

- பலதுறை மருந்தகத்தில் கண்காணிப்பின்கீழ் காசநோய் மருந்துகளை உட்கொள்ளவேண்டிய நேரடி கண்காணிப்பு சிகிச்சையே காசநோயிலிருந்து முழுமையாகக் குணமடைவதற்கான ஆகச்சிறந்த வழியாகும்.
- மருத்துவர் உங்களுக்குக் கொடுத்த மருந்துகளை நீங்கள் தவறாமல் உட்கொண்டால், ஒரு சில வாரங்களுக்குப் பிறகு உங்கள் மூலமாகக் கிருமி பரவுவது தடுக்கப்படும். உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் உங்களிடமிருந்து காசநோய் பரவாது.
- குவளைகளையும் பாத்திரங்களையும் பகிர்ந்து கொள்வதால் காசநோய் பரவாது. எனவே, நீங்கள் சிகிச்சை பெறும் காலகட்டத்தில் உங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து உண்ணலாம்.
- நீங்கள் சிகிச்சை பெறும் காலகட்டத்தில் தொடர்ந்து வேலைக்குச் செல்லலாம்.



உங்களுக்கு மேல்விவரம் தேவைப்பட்டால், உங்களது குடும்ப மருத்துவரிடம் பேசுங்கள் அல்லது டான் டோக் செங் மருத்துவமனையின் காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

HELP YOURSELF TB PROTECT OTHERS

Singapore Tuberculosis Elimination Programme

**காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு**
Specialist Outpatient Clinic K
144 Moulmein Road
Singapore 308089
**தொடர்புக்கு:**
6356 5294

Tan Tock Seng HOSPITAL
National Healthcare Group

டான் டோக் செங் மருத்துவமனை, சிங்கப்பூர் 2018. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. எல்லா விவரங்களும் ஜூலை 2018 நிலவரப்படி சரியானவை. இந்த ஆவணத்தின் எந்தவொரு பகுதியும் டான் டோக் செங் மருத்துவமனையிடம் முன் அனுமதி பெறாமல் மறுபதிப்பு செய்யப்படவோ, நகலெடுக்கப்படவோ, திரித்து தொகுக்கப்படவோ, தழுவப்படவோ, விநியோகிக்கப்படவோ, வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படவோ, காட்சிக்கு வைக்கப்படவோ அல்லது தரவுத்தளத்தில், பயன்படுத்தக்கூடிய கோப்புத்தளத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்படவோ அல்லது ஏதேனும் வடிவத்தில் அனுப்பப்படவோ கூடாது. இந்த ஆவணத்தில் உள்ள எல்லா விவரங்களும் கூறுகளும் தகவலளிக்கும் நோக்கத்திற்கானவை மட்டுமே. உங்களது சொந்த மருத்துவர் அல்லது மற்ற மருத்துவ நிபுணர்கள் அளிக்கும் ஆலோசனைக்கு இவற்றை மாற்றாகப் பயன்படுத்தக்கூடாது.

PECC-TCU-ED-2018-241T-v1

Tan Tock Seng HOSPITAL

**காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு**

# காசநோய் சிகிச்சை




## காசநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது?

காசநோய் கடுமையான நோயாக இருந்தாலும், முறையான சிகிச்சையுடன் முழுமையாகக் குணப்படுத்திவிடலாம்.
காசநோய்க்கான சிகிச்சையாக மொத்தம் ஆறு முதல் ஒன்பது மாதங்கள் வரை சிலவகை மருந்துகளை உட்கொள்ளவேண்டும். இந்த மருந்துகளில் பெரும்பாலானவை மாத்திரை வடிவில் இருக்கும். சிலருக்கு ஒரு சில வாரங்களுக்கு ஊசி மருந்தும் தேவைப்படலாம்.



காசநோய் இருப்பதாகக் கண்டறியப்படுவோரில் பெரும்பாலோர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டியதில்லை.
ஆனால், காசநோயாளிகள் எல்லாரும், சிங்கப்பூர் காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் **(STEP)**, நேரடி கண்காணிப்பு சிகிச்சை **(DOT)** பெறவேண்டும். இந்த சிகிச்சையின்போது, நோயாளிகள் தங்கள் வீட்டுக்கு அல்லது வேலையிடத்திற்கு அருகிலுள்ள பலதுறை மருந்தகத்தில், கண்காணிப்பின்கீழ் காசநோய் மருந்துகளை உட்கொள்ளவேண்டும்.



*நேரடி கண்காணிப்பு சிகிச்சை (DOT)*

## காசநோய் மருந்துகளால் என்னென்ன பக்கவிளைவுகள் ஏற்படும்?

காசநோய்க்குத் தரப்படும் மருந்துகள் பொதுவாகப் பாதுகாப்பானவை.

ஆனால், சில நோயாளிகளுக்குப் பின்வரும் பக்கவிளைவுகள் ஏற்படக்கூடும்:

- தலை கிறுகிறுப்பு
- தோல் அரிப்பு
- காய்ச்சல்
- மஞ்சள் காமாலை (தோல் அல்லது கண்கள் மஞ்சளாகுதல்)

மேற்காணும் பக்கவிளைவுகளில் ஏதாவது உங்களுக்கு ஏற்பட்டால், தயவுசெய்து உங்கள் மருத்துவரிடம் அல்லது பராமரிப்புக் குழுவினரிடம் உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்.

அதோடு, குறிப்பிட்ட சில காசநோய் மருந்துகளால் உங்களது சிறுநீர் சிவப்பு அல்லது ஆரஞ்சு நிறமாக மாறக்கூடும். இதனால் எந்த ஆபத்தும் இல்லை என்பதால் பீதி அடைய வேண்டாம். மருந்து நிறுத்தப்பட்ட பிறகு இந்நிலை மாறிவிடும்.

## காசநோய் சிகிச்சையை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டுமா?

காசநோய் சிகிச்சையை முழுமையாகப் பூர்த்தி செய்வது மிகவும் முக்கியம்.

சிகிச்சை தொடங்கி முதல் சில வாரங்களுக்குப் பிறகு உடல்நலன் தேறினாலும், காசசோய்க் கிருமி உங்கள் உடலில் இருந்து கொண்டிருக்கும்.

காசநோயிலிருந்து முழுமையாகக் குணமடைய, மருந்துகள் அனைத்தையும் முழுமையாக உட்கொண்டு சிகிச்சையைப் பூர்த்தி செய்வது அவசியம். உங்களுக்கு எந்தவித அறிகுறிகள் இல்லாவிட்டாலும் சிகிச்சையைப் பூர்த்தி செய்யவேண்டும்.

## காசநோய் சிகிச்சையை நான் முழுமையாகப் பூர்த்தி செய்யாவிட்டால் என்னவாகும்?

காசநோய் சிகிச்சையை நீங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யாவிட்டால், உங்கள் உடலில் இருக்கும் காசநோய்க் கிருமி பெருகி, மறுபடியும் நீங்கள் நோய்வாய்ப்படக்கூடும்.

அதோடு, நீங்கள் உட்கொள்ளும் மருந்துகளை எதிர்க்கவல்ல ஆற்றலையும் காசநோய்க் கிருமி உருவாக்கிக் கொள்ளக்கூடும் (அதாவது, நீங்கள் உட்கொள்ளும் மருந்துகளால் நோய்க்கிருமியை அழிக்க இயலாமல் போய்விடும்).

பல மருந்துகளையும் எதிர்க்கவல்ல **(MDR)** காசநோயால் நீங்கள் பாதிக்கப்பட்டால்:

- நீங்கள் வேறு மருந்துகளை உட்கொள்ள நேரிடும். இந்த வகை காசநோய்க்கான மருந்துகளைக் கூடுதல் காலத்திற்கு உட்கொள்ளவேண்டும். அதோடு, அதிகமான பக்கவிளைவுகளும் ஏற்படும்.



*MDR காசநோய்க்கான மருந்துகளை 20 முதல் 24 மாதங்களுக்கு உட்கொள்ளவேண்டும்*

- இந்த வகை காசநோயிலிருந்து குணமடையும் சாத்தியம் வெகுவாகக் குறைந்துவிடும்.
- இந்த வகை காசநோயை உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் நீங்கள் பரப்பிவிடக்கூடும்.